I Additional District Court, Thoothukudi.

<u>O.S.No.5/2023 ______________________ நாள் : 01.12.2025</u>

<u>வா.சா.1– திரு.பூலோகப் பாண்டியன்.</u>

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

புல எண் 130/1ல் மொத்த விஸ்தீரணம் 1.53 ஏக்கர். அந்த சொத்து பூலைய்யாத்தேவர், காசிராஜ தேவர், முத்தையா தேவர், சுப்பையாதேவர் ஆகியோருக்கு பாத்தியப்பட்டது. வா.சா.ஆ1 'அ' பதிவேட்டில் பூலைய்யாத் தேவர், காசிராஜ தேவர், சுப்பையா தேவர் மற்றும் சுப்பையா பிள்ளை ஆகியோர் பெயர் உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்து பரம்பரை பரம்பரையாக 300 ஆண்டுகளுக்கு எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது. 300 ஆண்டுகளுக்கு எங்கள் குடும்ப முன்னோர்களின் பெயர்களை சொல்லமுடியாது. பூலைய்யாத்தேவரின் தகப்பனார் பெயர் வெள்ளக்கண்ணுத் தேவர். பூலைய்யாத்தேவருடன் பிறந்தவர்கள் இரண்டு சகோதரிகள். பூலைய்யாத்தேவரும், அவரது சகோதரிகளும் பாகப்பிரிவினை செய்து கொள்ளவில்லை. பூலைய்யாத்தேவரின் மக்கள் தாளமுத்து தலைவர் (எ) முத்துப்பாண்டியன் மற்றும் பலவேசகன் தலைவர், என் தகப்பனாரான வேலைய்யா தேவர் மற்றும் சோமுத்தேவர். அவர்களுடன் பிறந்த பெண் பிள்ளைகள் பெயர் வெள்ளத்தாய், சின்னத்தாய், கல்யாணிதாய். பூலைய்யாத்தேவரின் மனைவி பெயர் ராமாத்தாய். தாளமுத்து தலைவருக்கு 2 ஆண் பிள்ளைகள். சங்கர பாண்டியன், சின்னத்துரை ஆகிய இரண்டு ஆண் பிள்ளைகள். சோமுத் தேவருக்கு லெட்சுமி, செல்வராணி ஆகிய இரண்டு பெண் பிள்ளைகள். வெள்ளத்தாய்க்கு முத்துப்பாண்டியன், பூலோகப் பாண்டியன் ஆகிய இரண்டு ஆண் பிள்ளைகள். சின்னத்தாய்க்கு செந்தில் லெட்சுமி என்ற ஒரே மகள். அவரும் இறந்துவிட்டார். அவரது மகன் பெயர் பலவேச கண்ணன். மேற்படி

கல்யாணி உயிருடன் இருக்கிறார். பூலைய்யாத்தேவரின் வாரிசுகள் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள். பூலைய்யாத்தேவர் மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினையை செய்து கொடுத்தது பற்றி எனக்கு நேரில் தெரியாது. அந்த விபரத்தை வழக்குரையில் சொல்லவில்லை. வாய்மொழி பாகப்பிரிவினை எங்கு, எப்படி யார் முன்னிலையில் நடந்தது என்று எனக்கு நேரில் தெரியாது. என் தகப்பனார் சொல்லித் தெரியும். யார் யார் முன்னிலையில் நடந்ததாக என் தகப்பனார் சொன்னார் என்றால் என் தகப்பனார் அதுபற்றி சொல்லவில்லை. யார் யாருக்கு எந்த எந்த சொத்துக்கள் பாகமாக ஒதுக்கப்பட்டது என்பது எனக்குத் தெரியாது. வாய்மொழி பாகப்பிரிவினையை உறுதி செய்து இந்த வழக்கில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. பூலைய்யாத்தேவர் பெயரிலோ, வேலைய்யா தேவர் பெயரிலோ வாய்மொழி பாகப்பிரிவினை உறுதி செய்து தனிப்பட்ட எதுவும் தாக்கல் செய்யவில்லை. காசிராஜ தேவரின் தகப்பனார் பெயர் அரிய தேவர். காசிராஜ தேவரின் உடன்பிறந்தவர்கள் பெயர் பாப்பாத்தி, மீனாட்சி, சின்னத்தாய் என்றால் சரிதான். காசிராஜ தேவர் தனக்கு பாத்தியப்பட்ட சொத்தில் 5 செண்ட்டை தங்கவேல் நாடாருக்கு 1980ல் கிரையம் செய்து கொடுத்தார் என்றால் அவர் பாகத்தை கிரையம் செய்து கொடுத்தார். தங்கவேல் நாடாருக்கு மொத்த சொத்தில் மத்தியில் 5 செண்ட் கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். அந்த சொத்தை பொறுத்து எங்களுக்கு உரிமையில்லை. அதில் நாங்கள் உரிமை கொண்டாடவில்லை.

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2025.12.01 18:02:06 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.